# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 29 ஹிஜ்ரி 1437 ஷவ்வால் ஜூலை 2016

இலவசம்



# இனிய நோன்பிருந்தோம் இறையருளைப் பெறுவோம்

# அனைவரையும் ஒருங்கிணைக்கும் இனிய நோன்பு

பிரதமர் லீ சியென் லூங், பொங்கோல் அல் இஸ்லாஹ் பள்ளிவாசலில் நடைபெற்ற நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் நற்பணிகளைப் பாராட்டினார். 27-6-2016 மாலையில் தொடங்கிய இஃப்தாரில், முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் தகவல்-தொடர்பு அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அனைவரையும் வரவேற்றார்.

இஸ்லாம், அனைவரையும் உள்ளடக்கும் ஒரு சமயமாகத் திகழ்வதை மெய்ப்பிக்கும் வகையில், பள்ளிவாசல் அனைவரையும், திறந்த கரங்களுடன் வரவேற்பதாக அமைச்சர் கூறினார்.

சென்ற ஆண்டு திறக்கப்பட்ட மஸ்ஜித் அல் இஸ்லாஹ், சிங்கப்பூரின் 69ஆம் பள்ளிவாசல். 3,700 சதுர மீட்டர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தப் பள்ளிவாசலில், 4,500 பேர் தொழுது கொள்ளலாம். 1,120 முஸ்லிம் மாணவர்கள் சமயக் கல்வி பயில்வதற்கு வசதியாக 10 வகுப்பறைகள் உள்ளன.

பிரதமர் லீ சியென் லூங், அல் இஸ்லாஹ் பள்ளிவாசலின் நவீன வசதிகளைப் பார்வையிட்டார். அவருடன் சமயத் தலைவர்களும் அடித்தளத் தலைவர்களும் கலந்து கொண்டனர். புனித ரமலான் மாதத்தில், பள்ளிவாசல்களில் நடைபெறும் இஃப்தார் உள்ளிட்ட சிறப்பு நிகழ்ச்சிகளை, அவர் பாராட்டினார். சிங்கப்பூரின் ஆகப் புதிய பள்ளிவாசலான மஸ்ஜித் அல் இஸ்லாஹ், பொங்கோல் வட்டாரத்துடன் முழுமையாக ஒருங்கிணைந்திருப்பதை அவர் வரவேற்றார்.



அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம், பள்ளிவாசல்களின் கடமைப் பொறுப்புகளை எடுத்துரைத்தார். பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், ஒட்டுமொத்த சமூகமாக அனைவரையும் ஒருங்கிணைப்பது வழிபாட்டுத் தலங்களுக்கு உள்ள முக்கிய பொறுப்பு என்று அவர் கூறினார்.

பொங்கோல் பள்ளிவாசல் அந்தக் கடமையைச் செய்து வருகிறது. நோன்பு திறப்பு நிகழ்ச்சிக்கு வருபவர்களில், சுமார் 50 விழுக்காட்டினர் வெளிநாட்டு ஊழியர்கள். நோன்புக் கஞ்சி வழங்கப்படும் போது முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் கொடுக்கிறோம். அனைவரையும் அரவணைக்கும் சமயம் இஸ்லாம் என்பதை, நிலைநாட்ட விரும்புகிறோம் என்றார் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம்.

## ஹஜ் பெருநாள் குர்பானி

ஹஜ் பெருநாள் அன்று குர்பான் கொடுப்பதற்காக சிங்கப்பூருக்கு 3,500 ஆடுகள் தருவிக்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவிலிருந்து 1,800 ஆடுகளும், அயர்லாந்திலிருந்து 1,700 ஆடுகளும் கொண்டுவரப்படும். மினி என்வைரான்மெண்ட் சர்விஸ் நிறுவனம் (MES), இந்த குர்பானி ஆடுகளின் விற்பனைக்கு அங்கீகாரம் பெற்றுள்ளது.

குர்பானிக்கான பதிவு 17-6-2016ல் தொடங்கி, ஆகஸ்டு 28 வரை நடைபெறும். குர்பான் சடங்கை நிறைவேற்ற விரும்புவோர், தங்கள் விருப்பத்தையும் விவரங்களையும், 28 பள்ளிவாசல்களில் தெரிவிக்க வேண்டும். அதற்கான விண்ணப்ப படிவங்களை 28 பள்ளிவாசல்களில் பெற்றுக் கொள்ளலாம். MES நிறுவனத்தின் இணையத் தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் ஓர் ஆட்டின் விலை 490 வெள்ளி என்றும், அயர்லாந்து நாட்டு ஆட்டின் விலை 556 வெள்ளி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முயிஸ் நோன்புப் பெருநாள் வாழ்த்து

மீண்டும் நமக்கு இவ்வாண்டு 2016, ஹிஜ்ரி 1437, ரமலான் நோன்பை நல்கிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். அவன் நமது நற்செயல்களை ஏற்றுக்கொண்டு, அவனுடைய அளவற்ற அருளை நமக்கு அருளட்டும். அதோடு, அனைவருக்கும் கருணையாகவும் முன்மாதிரியாகவும், அல்லாஹ்வினால் அனுப்பி வைக்கப்பட்ட நமது அன்புக்குரிய நபிகள் நாயகம் மீது, சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.



ரமலான் முழுவதும் சமூகத்தின் நன்மைக்காக ஆன்மீக மீள்திறனையும், உடல்நலனையும் வளர்க்கும், பற்பல நடவடிக்கைகள் நமது பள்ளிவாசல்களில் நடத்தப்பட்டன. ஆரோக்கியமான, அதிக ஊட்டச்சத்துடைய, இஃப்தார் உணவு வகைகள், மாலை நேரத் தொழுகைகள் மற்றும் பர்து அயின் பட்டறைகள், ஆகியவை இவற்றில் அடங்கும். இவை தவிர, சமூகத்தை வலுப்படுத்துவதற்காகப் பல்வேறு அறப்பணி முனைப்புகளின் மூலம் தொடங்கப்பட்ட மற்ற திட்டங்களும் உள்ளன. குடும்பத்தோடு ரமலானைக் கொண்டாடுவோம் என்ற கருப்பொருளுக்கு ஏற்ப அறிவாற்றலை வளர்த்து, குடும்ப உறவை வலுப்படுத்தி, ஆரோக்கிய வாழ்க்கை முறையில் அக்கறை காட்டும் மனப்போக்கை வளர்ப்பதற்காகப் பற்பல திட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, நமது பள்ளிவாசல்களை வளமாக்கும் முனைப்பில் முக்கிய பங்காற்றிய அலுவலர்கள், தொண்டூழியர்கள் அனைவருக்கும் நன்றி. ரமலான் மாதத்தில், நமது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், ஆகியோருடன் நாம் வளர்த்துக்கொண்ட நீடித்த பந்தங்களும், ஒற்றுமை உணர்வும், ரமலான் மாதத்திற்குப் பிறகும் நிலைத்திருக்க வேண்டும்.

ஆரோக்கியமான உணவுப்பழக்கமும் வாழ்க்கைமுறையும், ரமலான் மாதத்திற்குப் பிறகும் கட்டிக்காக்கப்படவேண்டும். ஒருவர்மீது மற்றவர் மரியாதை காட்டி ஒருவருக்கொருவர் உதவி செய்து, நமது குடும்ப உறுப்பினர்களுடனும், சமூகத்துடனும், தொடர்ந்து நல்லுறவை வளர்த்திடுவோம். சிங்கப்பூரின் பல கலாசார சமுதாயத்தில், நல்லிணக்கத்துடன் வாழ ஊக்கமளிப்போம். இவ்வாறு செய்வதன் மூலம் அல்லாஹ் நம்மை நெருக்கமாக்கிக் கொள்வான் என எதிர்பார்த்திருப்போம்.

ஷவ்வால் மாதத்தின் குதூகலத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், உள்ளூரில் அல்லது அயல்நாட்டில், சோதனைகளுக்கும் இன்னல்களுக்கும் இலக்கானவர்களை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் தீங்கிலிருந்து பாதுகாக்கப்பட்டு, விடாமுயற்சி, மனவலிமை, பொறுமை ஆகியவற்றை இறைவனின் அருளால் பெறட்டும் எனப் பிரார்த்திப்போம்.

ஈதுல் ஃபித்ர் கொண்டாட்டத்தை முன்னிட்டு, முயிஸ ுக்கு ஆதரவளித்து முயிஸ் மீது நம்பிக்கை வைத்த சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்திற்கு, எங்களின் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ரமலான் உணர்வு நீடித்து நிலைக்கட்டும். பரிவுமிக்க சமூகத்தை நிர்மாணித்து, குடும்ப உறவை வலுப்படுத்த, நாங்கள் எடுக்கும் முயற்சியால் அனைவருக்கும் பெரும் நல்லாசிகள் கிடைக்கட்டும்!

# சிங்கப்பூர் மேம்பாட்டுக்கு முஸ்லிம் சமூகத்தின் முக்கிய பங்கு
# அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் பெருமிதம்

ஒற்றுமையான பரிவுள்ள, துடிப்பான சிங்கப்பூர் சமுதாயத்தை உருவாக்குவதில், முஸ்லிம் சமூகம் முக்கிய பங்காற்றுகிறது. வருங்கால சந்ததியின ருக்கான மேலும் சிறந்த, விரும்பத்தக்க இல்லத் தை உருவாக்குவது, நமது பொறுப்பு. அதனால் சமூக மேம்பாட்டுப் பணி தொடர வேண்டும்.

முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச் சர், டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தமது நோன் புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்தார்.

சிங்கப்பூர் முஸ்லிம்கள் ரமலான் நோன்பு மாதத்தை அமைதியான வழிபாட்டிலும், ஈகை நன்கொடையிலும் செலவழித்தனர். இந்தக் கட மை தொடரப்படவேண்டும். வரும் ஆண்டுகளில் இன்னும் சிறப்பான, விரும்பத்தக்க இல்லமாக, நமது சிங்கப்பூரை உருவாக்கும் நற்பணியில், முஸ்லிம்கள் தொடர்ந்து ஈடுபடவேண்டும் என்று அவர் கூறினார்.

சிங்கப்பூர் சமுதாயத்துக்கு, உள்ளூர், வெளியூர், முஸ்லிம்கள் ஆற்றிய பங்கை அமைச் சர் நினைவுகூர்ந்தார். "பள்ளிவாசல்களிலும் மற்ற பல இடங்களிலும் நோன்புப் பெருநாள் உணவை தொண்டூழியர்கள் தயார் செய்ததைக் கண்டு மகிழ்ந்தேன். நமது இளைஞர்கள், வசதி குறைந்தவர்களுக்கு உதவி வழங்கி, அவர்களை மகிழ்வித்தனர். குறைந்த சம்பளம் பெறும் வெளி நாட்டு ஊழியர்களும் நிதி திரட்டி உதவியது குறிப்பிடத்தக்கது," என்று அமைச்சர் தெரிவித் தார்.

முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையின ராகக் கொண்ட சில நாடுகளில், அண்மையில் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் அறிவற்ற செயல்கள். அவை இஸ்லாத்துக்கு எதிரானவை. முஸ்லிம்களை பிரதிநிதிப்பவை அல்ல என்று அமைச்சர் கண்டித்தார்.

சவூதி அரேபியாவின் புனித மதீனா நகர், துருக்கி, பங்களாதேஷ், மலேசியா, இந்தோனே சியா, ஆகியவற்றில் நிகழ்ந்த குண்டுவெடிப்புக் கள், தமக்கு அதிர்ச்சியையும், கவலையையும், ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். "மிரு கத்தனமான தாக்குதல்கள் இவை. அறிவற்ற இந்த பயங்கரவாதச் செயல்கள் சமயச் சார்பின்றி, மனிதநேய நல்வாழ்வை அலட்சியப் படுத்துபவை," என்றும் அவர் கண்டித்தார்.



முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நகர்களிலும், நாடுகளிலும் நிகழ்ந்த இந்த தாக்கு தல்கள், புனித ரமலான் நோன்பு மாதத்தில், முஸ்லிம்களின் உயிர்களைப் பறித்துள்ளன. பய ங்கரவாதிகளின் கொடூரமான இச்செயல்கள், இஸ்லாத்துக்கு எதிரானவை என்பதையும், உலகெங்கும் வாழும் முஸ்லிம்களை, அவர்கள் மதித்துப் பிரதிநிதிக்கவில்லை, என்பதையும் உறுதிப் படுத்துகின்றன என்றார் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம்.

சிங்கப்பூரர்கள் விழிப்புணர்வுடனும், ஒரே சமூக மக்களாகவும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## முஃப்தி

முயிஸ் மன்றத்தின், முஃப்தி முகம்மது பத்ரிஸ் பக்ரமும், அண்மைய பயங்கரவாதத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்தார். இவற்றுக்கும், இஸ்லாத்துக்கும், தொடர்பில்லை என்றும் அவர் கூறினார்.

# நமது குடியரசின் சமுதாயப் பிணைப்பை பேணிக் காப்போம்!

முஸ்லிம்களையும், முஸ்லிம் அல்லாதவர்களையும், அரவணைத்துச் செல்லக்கூடிய இஸ்லாமிய தத்துவத்தை, சிங்கப்பூர் முஸ்லிம்கள் தொடர்ந்து மேம்படுத்த வேண்டும். மேலும் இங்குள்ள வலுவான சமூகப் பிணைப்பைக் கட்டிக்காக்க வேண்டும்!

அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் புக்கிட் பாத்தோக் அர்-ராவுதா பள்ளி வாசலில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் தொழுகையில் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சிங்கப்பூரர்கள் என்ற முறையில், நமது சமூகத்திலுள்ள, அனைத்து கலாசார இயல்புகளையும், பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு உண்டு. இஸ்லாத்தில் நாம் கற்றுக் கொண்டதை இவற்றுடன் பொருத்திப் பார்க்க வேண்டும். சமூக நல்லிணக்கத்தையும், பாதுகாப்பையும், சிங்கப்பூர் அலட்சியமாக எடுத்துக் கொள்ள இயலாது, என்பதை வெளிநாடுகளில் புனித ரமலான் மாதத்தில் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் நினைவூட்டுகின்றன, என்றார் அவர்.

மதீனா நகரில் 4-7-2016 அன்று, நபி மஸ்ஜித் பகுதியில், பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலைச் சுட்டிக்காட்டிய



மனித உயிர்களின் புனிதத்திற்கு, முக்கியத்துவம் வழங்கும் இஸ்லாத்தின் பெயருக்கு, மாசு விளைக்கும் விதமாக, இந்தத் தாக்குதல்களை, தவறான வழிகாட்டுதலுக்கு ஆளான சிலர் நடத்தியுள்ளனர் என்றார் முஃப்தி.



அமைச்சர், வன்முறையும், தீவிரவாதமும், வேரூன்ற சிங்கப்பூர் ஒரு போதும் இடம் தராது என்று உறுதி தெரிவித்தார்.

“இது போன்ற தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள், இஸ்லாமிய மரபுகளையும், முஸ்லிம்களையும் மதிக்காதவர்கள். இத்தகைய செயல்களுக்கு எதிராக முஸ்லிம்கள் திளர வேண்டும் என்று நான் கருதுகிறேன். நமது சமயத்தலைவர்கள் அனைவரும் இச்செயல்களைக் கண்டிப்பதோடு நின்றுவிடாமல், இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதை உணர்த்த வேண்டும்,” என்று அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் வலியுறுத்தினார்.

## நபி மொழி

“இறைவன் உங்களுக்கு இரண்டு சிறப்பான பொருட்களை வழங்கியுள்ளான். ஒன்று ஈகைத் திருநாள், மற்றொன்று தியாகத் திருநாள். எனவே, இந்த இரண்டு பெருநாட்களையும், மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள். முழு மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்.
பெருநாட்களின் போது நோன்பு நோற்பது தடை செய்யப்பட்டுள்ளது. பெருநாளாகிய இன்று, உண்பதற்கும், பருகுவதற்கும் உரிய நாளாகும். ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள். இறைவனை அதிகம் நினைவு கூருங்கள்.”

## நமது நினைவுச் சின்னங்களுக்கு பராமரிப்பு நிதி உதவி

இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையமான, தெலுக் ஆயர் வீதி நாகூர் தர்காவின் கண்காட்சிக் கூடங்கள், விரிவாக்கம் செய்யப்பட்டு மேம்படுத்தப்படவிருக்கின்றன. 1827ல் கட்டப்பட்ட தர்காவுக்கு மேலும் பொலிவூட்டும் வகையில் சீரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நினைவுச் சின்னங்கள் பாதுகாப்புப் பிரிவு (பி.எஸ்.எம்.), இதற்கு உதவுகிறது. 20 நினைவுச் சின்னங்களின் பராமரிப்புப் பணிகளுக்கு, இந்த ஆண்டில் மொத்தம் 2 மில்லியன் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் நாகூர் தர்கா மரபுடைமை நிலையமும் அடங்கும்.

நாகூர் தர்கா மரபுடைமை நிலையத்தை நாம் தொடர்ந்து நல்ல முறையில் பேணவும், பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கவும், மேம்பாட்டுப் பணிகள் உதவுவதாக, நிலையத்தின் செயலாளர் நசீர் கனி தெரிவித்தார். கட்டட உறுதிப்பாடு, பழுது பார்த்தல், சுத்திகரிப்பு, முதலானவற்றுக்கு நிதி வழங்கப்படுகிறது.

"நமது தேசிய நினைவுச்சின்னங்கள் போன்ற பழைய கட்டிடங்களைப் பராமரிப்பது சாதாரண வேலையல்ல. அவற்றின் நிர்வாகிகளுக்கு அதிகக் கடப்பாடும் நிதியும் தேவை. இந்தத் தேவையை அங்கீகரித்து, தேசிய நினைவுச்சின்ன நிதியை நாங்கள் மேம்படுத்தியுள்ளோம்," என்று, நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு இயக்குநர் தெரிவித்தார். வருங்காலத் தலைமுறையினருக்கு ஏற்ற முறையில் நமது நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்படுவதை இந்தக் கூட்டு முயற்சி உறுதிப்படுத்துகிறது.

இந்த ஆண்டு தேசிய நினைவுச் சின்னங்களின் பராமரிப்புக்கு, 2 மில்லியன் வெள்ளிக்கும் அதிகமான தொகை வழங்கப்படுகிறது.

கடற்கரைச் சாலை ஹஜ்ஜா பாத்திமா பள்ளிவாசலும் பராமரிப்பு நிதியைப் பெறுகிறது. அதுவும் சிங்கப்பூர் தேசிய நினைவுச் சின்னங்களில் ஒன்று.

## நாடாளுமன்ற நாயகர் ஹலிமா யாக்கூபுக்கு கௌரவ டாக்டர் பட்டம்



சிங்கப்பூரின் முதல் பெண் நாடாளுமன்ற நாயகரான, திருவாட்டி ஹலிமா யாக்கூப், கௌரவ முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், இந்தப் பட்டத்தை வழங்கி சிறப்பித்துள்ளது.

சிங்கப்பூருக்கும், அதன் சமூகத்திற்குமான அவரது பங்களிப்பை, அங்கீகரிக்கும் விதமாக அவருக்கு, இந்த கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவியான, 61 வயது ஹலிமா யாக்கூப், 7-7-2016ல் நடந்த பட்டமளிப்பு விழாவில், சட்டத் துறைக்கான கௌரவ முனைவர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதிபர் டோனி டான் அதனை வழங்கிச் சிறப்பித்தார்.

சிங்கப்பூர் நாடாளுமன்றம், 2013 ஜனவரி 14அன்று, அவரை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தது. ஹலிமா யாக்கூப், 2001ல் அரசியலுக்கு வந்தார். ஜூரோங் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2011ஆம் ஆண்டில் சமூக வளர்ச்சி துணை அமைச்சராகப் பதவி ஏற்றார்.

ஹலிமா, ஜூரோங் நகரமன்றத்தின் தலைவராகவும் இருந்தார். தேசிய தொழிற்சங்க காங்கிரசின், துணைச் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார்.

மலாய் சமூக முன்னேற்றத்திற்கு அவர் ஆற்றிய பங்கை பாராட்டி பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



PM Lee Hsien Loong's inaugural visit to Al-Islah Mosque and Iftar, 27 June 2016




Official launch of the Touch of Ramadhan (Sentuhan Ramadhan), 29 May 2016



Ramadhan Disbursement Ceremony 2016 (Rahmah Ramadhan 2016), 24 June 2016



Completion of renovation works (lift added), at Sallim Mattar Mosque, 11 June 2016




Al Falah Mosque reopens after upgrading works, 22 April 2016



Iftar at Al-Ansar Mosque, "Eat Well, Waste Less", in line with this year's Touch of Ramadhan



Meeting between MUIS, Spore Bangladeshi Society and Dormitory religious leaders, Assyakirin Mosque



ICT (Information and Communications Technology) education in our Madrasah

# சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், ஜாமியா சூலியா பள்ளிவாசல் இணைந்து நடத்திய இஃப்தார் சிறப்பு நிகழ்ச்சி

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், ஜாமியா சூலியா பள்ளிவாசல், இணைந்து 25-6-2016 மாலையில் இஃப்தார் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தின. இந்நிகழ்ச்சி சவுத் பிரிட்ஜ் சாலை ஜாமியா சூலியா பள்ளிவாசலில் நடைபெற்றது.

வெளியுறவு அமைச்சர், விவியன் பாலகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சிண்டா உள்ளிட்ட, பல அமைப்பு களின் தலைவர்களும் வருகையளித்துச் சிறப்பித் தனர்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்கின் செயலாளர், ராஜா முகம்மது, அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். பள்ளிவாசல் இமாம், பெருமானார் நபிகள் நாயகம் அவர்களின், சகிப்புத் தன்மையையும், சகோதரத் துவ நெறிமுறைகளையும் தமது உரையில் விரிவாக எடுத்துரைத்தார். அவர்களின் வழியில் சகோதரத்துவத்தையும், சமூக ஒற்றுமையையும், அனைவரும் பின்பற்ற வேண்டும். அதுவே இஸ்லாத்தின் இலக்கு என்று இமாம் குறிப்பிட்டார்.

ரமலான் நோன்பு மாதம் முழுவதும் இஃப்தார் நிகழ்ச்சிகளில், முஸ்லிம் நண்பர்களுடன் பல இன, சமயங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்வது சமூகத்தின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கிறது என்று அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் கூறினார்.

சமூகத்தில் நிலவும் அமைதியையும், நல்லிணக்கத்தையும், இந்நிகழ்ச்சிகள் கட்டிக்காக்கி





ன்றன என்றும் அவர் தெரிவித்தார்.

உலக நாடுகள் பலவற்றில், சமூகப் பிரிவினையால், பதற்றம் மிகுந்த சூழல் நிலவும் இவ் வேளையில், சிங்கப்பூரில் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாக மக்கள் நல்லிணக்கத்துடனும், சகிப்புத் தன்மையுடனும் வாழ்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர், நசீர் கனியின், முன்னறிவிப்பைத் தொடர்ந்து, சிண்டாவின் கல்வி உதவித்தொகை, மாணவ மாணவிகளுக்கு இந்நிகழ்ச்சியில் வினியோகிக்கப்பட்டது.

ஆசிரியர் மு.அ.மசூதும், எழுத்தாளர் ஜே.எம்.சாலியும் எழுதி வெளியிட்ட "சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்கள்" நூல் பிரதி ஒன்று அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டது.

## லைலத்துல் கத்ரு

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், 1-7-2016 அன்று, லைலத்துல் கத்ரு (நோன்பு 27), இரவை சிறப்பான நிகழ்ச்சிகளுடன் கொண்டாடியது. தெலுக் பிளாங்கா வே, அல் அமீன் பள்ளிவாசலில், இரவுத் தொழுகையைத் தொடர்ந்து தராவிஹ் தொழுகையும், சிறப்பு பயானும், இடம்பெற்றன. தஸ்பீஹ் தொழுகை, திக்ரு மஜ்லிஸ், கியாமுல் லைல் தொழுகை, சிறப்பு துஆ போன்ற நிகழ்ச்சிகளும் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றன. நிறைவாக, அழைப்பை ஏற்று வந்திருந்த அனைவருக்கும் சஹர் உணவும் வழங்கப்பட்டது.

# தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க நிகழ்ச்சிகள்

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், நோன்பு மாதத்தில் சில நிகழ்ச்சிகளை நடத்தியது. அதன் ஏற்பாட்டில், அல் அப்ரார் பள்ளிவாசலில் *11-6-2016* மாலை நோன்பு திறப்பு நடைபெற்றது. பல முக்கிய சமுதாய அமைப்புளின் பிரமுகர்கள் அதில் கலந்து கொண்டனர்.



தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், ஆண்டுதோறும் நடத்திவரும் அல் மதரஸா நூருல் இஸ்லாம் மாணவர்கள் முகாம், ஜுன் *17-18* ஆகிய இருதினங்களில் ஜாமியா



சூலியா பள்ளிவாசலில் நடைபெற்றது. மதரஸா மாணவர்களுக்கு தீனிய்யாத் பயிற்சியும், தொண்டூழியம் புரிவதன் அவசியத்தை எடுத்துரைக்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. அதில் *30* மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்ததாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# ஆசிரியர் மு.அ.மசூதுக்கு மூத்த தொழிற்சங்கவாதி விருது

மூத்த தொழிற்சங்கவாதியும், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் துணைத் தலைவரு மான, மு.அ.மசூது அவர்களுக்கு *2016* மே தின வாழ்த்து விருதான, தொழிலாளர் விருது வழங் கப்பட்டுள்ளது.



தமிழாசிரியர்கள் சங்கத்தின் உயர்வுக்காக வும், ஆசிரியர்களின் நலன்களுக்காகவும், பாடுபட்டுவருவதைச் சிறப்பிக்கும் விருது இது.

சிங்கப்பூர் இந்திய சமூகத்தின் மேன்மைக் காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் அவர் பாடுபட்டு வருகிறார். வசதி குறைந்தோரின் வாழ்வுக்காகவும் சமூக ஒற்றுமைக்காகவும் அவர் உழைத்து வருகிறார். அவற்றுக்குரிய அங்கீகா ரமே இந்த விருது என்று பல சங்கங்களும் அமைப்புகளும் ஆசிரியர் மு.அ.மசூதை வாழ்த்தின.

# மனதில் உறுதி வேண்டும்!
## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தன்முனைப்புத் திறன் நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 24-4-2016அன்று, உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில், "மனதில் உறுதி வேண்டும்" என்ற நிகழ்ச்சியை நடத்தியது. தமிழ் மொழி விழா 2016ன் ஓர் அங்கமாக, வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில் இது நடைபெற்றது.

அடுத்த தலைமுறைக்கு தமிழ் மொழியை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத் தோடு, தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு, இச்சங்கம் தமிழ் மொழியில் பயிற்சியளித்து, "மாணவர்கள் வழங்கும் கவிதை மாலை" என்ற புதிய அங்க மும் இளையர்களை ஈர்க்கும்வண்ணம் இடம் பெற்றது.

"மனதில் உறுதி வேண்டும்" என்ற தலை ப்பில் தமிழக தொலைக்காட்சிப் படைப்பாளர், கோபிநாத் உரையாற்றினார். எதிர்மறையான சிந்தனைகளுக்கு எப்போதும் இடமளிக்கக்கூ டாது என்றும், தமிழ் மொழியின் சிறப்புகளை யும், தமிழர்களின் கலாச்சார, பண்பாட்டுப் பின் னணிகளையும், நம் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும், என்றும் அவர் வலியுறுத்தி னார். தன்னம்பிக்கை என்பது நம்மிடமே இருக் கிறது, அதை நாம் சரியாக வெளிக்கொணர வேண்டும் என்றார்.

செம்பவாங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், திரு. விக்ரம் நாயர், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, தமிழ்





மொழி பேசுவதன் அவசியத்தை வலியுறுத்திய தோடு, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் கடந்த ஆறு ஆண்டுகளில் 52 நிகழ்ச்சிகள் நடத்தி, கல்வி சார்ந்த சமுதாயப் பணிகளை சிங்கப்பூரில் ஆற்றியிருப்பதைப் பாராட்டினார். சிறப்பு விருந்தினர், கவிதை மாலை வழங்கிய மாணவ மாணவியர்களுக்கும், GCE "A" LEVEL தேர்வில், உயர்தமிழ் உட்பட பல பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்கும், பாராட்டுச் சான்றி தழ் வழங்கினார்.

பேராசியர், முனைவர் சுப.திண்ணப்பன் ஆற்றிய தமிழ்ப்பணிகளைப் பாராட்டி, இச் சங்கம் அவருக்கு "ஜமாலியன் விருது" வழங்கி கௌரவித்தது.

சங்கத்தின் தலைவர், சிங்கப்பூர் பட்டயக் கணக்காய்வாளர், முனைவர் மு.அ.காதர் ஆற் றிய தலைமையுரையில், "நாம் ஒவ்வொருவரும் இன்று முதல் தமிழ்மொழியிலேயே வீட்டில் பேச வேண்டும் என்றும், நாம் தமிழ் மொழி யைக் காப்பதுபோல, பயங்கரவாத, மற்றும் தீவி ரவாத, மிரட்டல்களிலிருந்து நமது சிங்கப்பூர் தேசத்தை அதிக விழிப்புணர்வோடும், ஒற்றுமை யோடும் ஒருங்கிணைந்துக் காக்க வேண்டும்" என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சங்கத்தின் செயலவை உறுப்பினர், ஃபரீஜ் முஹம்மது நிகழ்ச்சியை வழிநடத்தினார். சங்கத்தின் துணைத் தலைவர், மு.கலந்தர் மைதீன் நன்றி கூறினார்.

# சிங்கப்பூர் மலாய், முஸ்லிம் சமூகப் பங்களிப்பு நூல்

சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு மலாய், முஸ்லிம் சமூகத்தினர், கடந்த 50 ஆண்டுகளில் ஆற்றிய பங்கை எடுத்துரைக்கும் நூல் வெளியிடப் பட்டுள்ளது.

முன்னாள் மூத்த துணை அமைச்சர், ஜைனுல் ஆபிதீன் ரஷீதும், டாக்டர் நூர்ஷரீல் சாத்தும், இந்த நூலை எழுதியுள்ளனர்.

பிரதமர் அலுவலக அமைச்சர், சான் சுன் சிங், 29-5-2016அன்று மஜுலா! 50 ஆண்டு சிங்கப்பூர் மலாய், முஸ்லிம் சமூகம் (Majulah! 50 years of Malay/ Muslim Community in Singapore) எனும் இந்த நூலை வெளியிட்டார். ஆர்ட்ஸ் ஹவுஸ் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், முன்னைய அதிபர் எஸ்.ஆர்.நாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சிங்கப்பூரின் சமூக முன்னேற்றம், கல்வி, கலை, பொருளியல் முதலான துறைகளின் வளர்ச்சிக்கு மலாய், முஸ்லிம் சமூகம் ஆற்றிவந்துள்ள பணிகளை இந்த 700 பக்க நூல் விவரிக்கிறது.



நமது குடியரசின், மலாய், முஸ்லிம் சமூக, வரலாறு ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்பதை, அமைச்சர் சான் சுன் சிங் சுட்டிக்காட்டினார். இந்த சமூகத்தின் பங்களிப்பு இல்லாமல் சிங்கப்பூரின் வரலாற்றை எழுதவோ, பேசவோ முடியாது என்றும் அவர் கூறினார்.

# இஸ்லாமியக் கல்வி இணையத்தளம்

இஸ்லாமியக் கல்வி இணையத்தளம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இஸ்லாம் மார்க்கம் தொடர்பான அனைத்து விவரங்களையும் இதன் வழியாகத் அறிந்து கொள்ளலாம்.

இளையர்களுக்கான இந்தப் புதிய இணையத்தளத்தை, தகவல் தொடர்பு அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம், கடந்த மே மாதம் 29அன்று புக்கிட் பாஞ்சாங் பள்ளிவாசலில் அறிமுகம் செய்து வைத்தார்.

லர்ன் இஸ்லாம் (Learnislam.sg), எனும் இந்த இணையத் தளத்தின் மூலம் பள்ளிவாசல்களும், சமயக் கல்வி அமைப்புகளும் நடத்தும் இஸ்லாமியக் கல்வித் திட்டங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**learnislam.sg**

“ஆக்ககரமான சூழல் நமது இளையர்களுக்கு அவசியம். அவர்களுக்கு எழக்கூடிய கேள்விகளுக்கு விடையும் விவரமும் அளிக்க இஸ்லாமிய சமய மன்றம்-முயிஸ் உள்ளது. இஸ்லாத்தைப் பற்றி அவர்கள் மேலும் தெரிந்து கொள்ள நாம் உதவுவது மகிழ்ச்சிக்குரியது!” என்றார் அமைச்சர்.

இளையர்களுக்கான முயிஸின் சேவைகளில் ஓர் அங்கமாக, இந்தப் புதிய இணையத் தளம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு முன், 2014ஆம் ஆண்டில், முஸ்லிம் பிள்ளைகளுக்கு இஸ்லாம் மார்க்கத்தைக் கற்பிப்பதற்கு, “கிட்ஸ் அலைவ் ஹோம் எடிஷன்” எனும் இல்லக் கல்வித் திட்டம் நிறுவப்பட்டதை அறிவோம்.

## கவிஞர் க.து.மு.இக்பால் சிறுவர் கவிதை நூல்கள்

கவிஞர் க.து.மு.இக்பால், ஆறு சிறுவர் கவிதை நூல்களை அண்மையில் வெளியிட்டுள்ளார். தொடக்க நிலை, உயர்நிலை, மாணவர்களுக் கான தொகுப்புகள் அவை.

தேசிய நூலகத்தில், *28-5-2016*அன்று அவற்றை வெளியிட்டு உரையாற்றினார் அவர். மொழி, பாடம், சிங்கப்பூர் கலாசாரம் முதலான தலைப்புகளில் கவிதைகள் இடம் பெற் றுள்ளன. "ஓடம்" தொகுப்பில் சிறுவர்களுக்கே ற்ற இசைப்பாடல்கள் உள்ளன.

கவிஞர் இக்பால், கலாசார பதக்க விருது, கலா ரத்னா விருது, தென்கிழக்காசிய இலக்கிய விருது, மோண்ட் பிளாங் இலக்கிய விருது, தமிழவேள் விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

இதய மலர்கள் - *1975*, அன்னை - *1984*, முகவரிகள் - *1989*, வைரக் கற்கள் - *1995*, கனவுகள் வேண்டும் - *2000*, காகித வாசம் - *2003*, வானவர்கள் மண்ணில் இருக்கிறார்கள் - *2005*, ஆகியவை முன்னதாக அவர் வெளியிட்ட நூல்கள்.




## சென்னை புத்தக விழாவில் சிங்கப்பூருக்குச் சிறப்பிடம்




சென்னை நகரில் *39*ஆம் ஆண்டு புத்தகக் காட்சி விழா, *2016* ஜூன் முதல் தேதியிலிருந்து *13* வரை, நடைபெற்றது. அதில் சிங்கப்பூருக்கு சிறப் பிடம் அளிக்கப்பட்டதால், தேசியக் கலை மன்ற த்தின் ஆதரவுடன், ஜே.எம்.சாலியும் மற்ற சில எழுத்தாளர்களும் விழாவில் கலந்து கொண்ட னர்.

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர், நா.ஆண்டியப்பன், சிங்கப்பூர் புத்தகக் காட்சிக்கூடத்துக்குப் பொறுப்பேற்று நடத்தி னார்.

*11-6-2016* மாலையில் நடைபெற்ற ஜே. எம்.சாலியின், "நவீன சிங்கப்பூரின் தந்தை லீ குவான் இயூ" நூல் அறிமுகம் சிறப்பான நிகழ்ச் சியாக அமைந்தது.

கவிஞர், மு.மேத்தாவும், எழுத்தாளரும் பத்திரிகையாளருமான மாலனும், ஜே.எம். சாலியின் நூலையும், இலக்கியப் பணிகளையும் பாராட்டி உரையாற்றினர். கலந்துரையாடலும் நடைபெற்றது.

சென்னை யுனிவர்சல் பதிப்பகம் வெளியி ட்ட ஜே.எம்.சாலியின் முத்திரைக் கதைகள், இஸ் லாமியத் தமிழ்க் காவியங்கள், ஆகிய நூல்களும் இவ்விழாவில் சிறப்பிடம் பெற்றன. *1958* முதல் *2001* வரை ஜே.எம்.சாலி எழுதிய *12* பரிசுக் கதைகள் முத்திரைக் கதை தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. முஸ்லிம் புலவர்கள் இயற்றிய சீறாப் புராணம், முதலான காவியங்கள் பற்றிய கட்டுரைத் தொகுப்பு நூலே இஸ்லாமியத் தமிழ்க்காவியங்கள்.